கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)

திருமங்கலம்.

2026–ம் ஆண்டு மார்ச் 16ம் நாள், திங்கட்க்கிழமை

அசல் வழக்கு எண்.245/2014

CNR No.TNMD130002412014

* * * *

1. இராதாகிருஷ்ணன்
2. சுப்பாரெட்டி
3. சுப்புராஜ்
4. பாலசுப்ரமணியன்
5. சுந்தர்ராஜன்
6. சின்னக்கம்மாள் என்ற பாப்பம்மாள்
7. பசுபதி
8. சுப்புலெட்சுமி ... வாதிகள்

/எதிர்/

1. ராமநாதன்
2. நடராஜன்
3. ராம்குமார்
4. ஜெயலெட்சுமி
5. மலர் பாப்பா
6. சசிக்குமார்
7. கார்த்திக்
8. வளர்மதி
9. லலிதா
10. தனலெட்சுமி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 05.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 1, 6, 8 மற்றும் 10ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.குருசாமி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 மற்றும் 7, 9 பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்த நிலையில், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த வாதுரை, பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை, மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

03.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.3/2013 கொண்ட அறக்கட்டளைப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், சித்தி விநாயகர் கோயிலின் மீதான வாதிகளின் உரிமையை பாதிக்காது என்று விளம்புகை செய்யக் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை செலுத்த கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. <u>வழக்குரை சுருக்கம் :–</u>**

1.1) தாவாச்சொத்து உண்மையில் 1 முதல் 5 மற்றும் 7 மற்றும் 8ம் வாதிகளுக்கும் இந்த நிர் 1ம் பிரதிவாதியின் தாய் வழிப்பாட்டனார் சுப்பா ரெட்டியார் என்பவருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி சுப்பா ரெட்டியாருக்கு பேய்க்குளம் கிராமத்தில் நிலங்கள் இருந்தன என்றும், அவற்றை தாவாக் கிராமத்தில் அமைந்துள்ள சித்தி விநாயகர் கோவிலுக்கு 13.02.1936ம் தேதி ஆவண எண்.108/1036ம் எண்ணின் படி செட்டில்மெண்ட் பதிவு செய்து கொடுத்துவிட்டார் என்றும், மேலும் அவர்களது வாரிசுதாரர்களும் மேற்படி பூஜைகளை வாரிசு கிரமத்தில் அடைந்து டிரஸ்டிகளாகவும் பரம்பரை பூசாரிகளாகவும் இருந்து செய்து வர வேண்டியது என்றும் 20.12.1940ம தேதி ஆவண எண்.2481/1940ன் படி பதிவு செட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும்,

1.2) இதற்கிடையில், இந்த நிர் பிரதிவாதிகள் பொய்யான மோசடியாய் ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டு ஒரு டிரஸ்ட் பத்திரம் ஆவண எண்.3/2013ன்படி 03.09.2013ம் தேதி உருவாக்கிக் கொண்டு, அதில் 1ம் பிரதிவாதி மட்டுமே சித்தி விநாயகர் கோவிலை உருவாக்கியவர் என்றும், அவரே தலைவர் என்றும் அவரது வாரிசுதாரர்கள் டிரஸ்டிகளாக அதாவது 2 முதல் 10 பிரதிவாதிகள்

மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நிர் வாதிகளையும் அவரது வாரிசுதாரர்களையும் அதாவது பசுபதி அம்மாள் மற்றும் லெட்சுமி அம்மாளின் வாரிசுதாரர்களை விலக்கி விட்டு சில கெட்ட உள் நோக்கத்துடன் மோசடியாக பட்டா தாவாச் சொத்துக்களுக்கு RTR 2048/2014 நாள் 20.04.2014ம் தேதி அன்று அவர்கள் பெயர்களில் பட்டா பெற்றுக் கொண்டு விட்டதை வாதிகள் அறிந்து கொண்டதாகவும்,

1.3) மேற்படி, பிரதிவாதிகளின் செயல் சட்டத்திற்கு விரோதமானது என்றும், அதனை அறிந்த கொண்ட வாதிகள், பிரதிவாதிகளை அணுகி மேற்படி பட்டா மாறுதல் விபரத்தினைப்பற்றி கேட்டபோது எதுவும் சொல்லாமல் மௌனமாக இருந்து விட்டனர் என்றும், 18.07.2014ம் தேதி தாவாச் சொத்தினை பொறுத்து இந்த நிர் பிரதிவாதிகளுக்குள் 03.09.2013ம் தேதி ஏற்படுத்தப்பட்ட வில்லங்கத்தினை தீர்த்துக் கொடுக்கக்கோரி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், 24.07.2014ம் தேதி பொய்யான சங்கதிகளைக் கூறி 1ம் பிரதிவாதி மட்டுமே பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும், ஆகவே 03.09.2013ம் தேதியிட்ட ஆவண எண்.3/2013 கொண்ட அறக்கட்டளைப்பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், சித்தி விநாயகர் கோயிலின் மீதான வாதிகளின் உரிமையை பாதிக்காது என்று விளம்புகை செய்யக்

கோரி தாவா வழக்கை தாக்கல் செய்ததாக வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

2. **1ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

(6, 8, 10 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டுள்ளார்கள்)

2.1) உண்மையில் மேற்படி சித்தி விநாயகர் கோவிலுக்கு தாவாச் சொத்துக்களை இந்த நிர் 1ம் பிரதிவாதியின் பாட்டனாரான சுப்பா ரெட்டியார் நல்ல எண்ணத்துடனும், தெய்வீக ஈடுபாட்டின் பேரிலும் பின்னால் வரும் நாளில் சந்ததிகளின் நற்செயலுக்காகவும், 1936, 1940, 1947ஆம் ஆண்டு தான செட்டில்மெண்ட் பத்திரங்களின் மூலம் பாத்தியப்பட்டு வைத்திருந்தார் என்றும், அதன் அடிப்படையில் மேற்படி சுப்பா ரெட்டியார் தன்னுடைய ஆயுள் காலம் வரை மேற்படி கோவிலுக்கு பூஜை மற்றும் புனஸ்காரங்கள் நல்லபடி செய்து வந்தார் என்றும், அவருக்கு பிறகு அவரது வாரிசுகள் செய்து வந்தனர் என்றும், தாவா செட்டில்மெண்ட் பத்திரத்தின்படி மேற்படி சுப்பா ரெட்டியாருக்குப் பிறகு பசுபதி அம்மாள் பெண் பாலராக இருப்பதால் மேற்படியாருக்கு உதவியாக மேற்படி கோவிலுக்கான அனைத்து பூஜை மற்றும் நற்காரியங்களை இந்த நிர் 1ம் பிரதிவாதி செய்து வந்தார் என்றும்,

2.2) மேலும் இந்த நிர் 1ம் பிரதிவாதி சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்படி கோவிலில் அனைத்து புஜை மற்றும் திருவிழாக்கள் வைபங்கள் மற்றும் நற்காரியங்கள் அனைத்தும் தனது சொந்த செலவிலேயே நடத்தி வந்தார் என்றும், மேலும் இந்த நிர் வாதிகளோ, மேற்படி லட்சுமி அம்மாள் வகையறாக்களோ மேற்படி கோவிலுக்கு எந்தக் காலத்திலும் எந்தவிதமான செயல்பாடுகளும் இன்று வரை செய்தது கிடையாது என்றும்,

2.3) மேலும் இந்த நிர் 1ம் பிரதிவாதி மேற்படி கோவிலின் நன்மைக்காக டிரஸ்ட் உருவாக்க வேண்டி இந்த நிர் வாதிகளிடம் பலமுறை சட்டப்படியாகவும் கேட்டதற்கு மேற்படி வாதிகள் மறுத்து விட்டதின் அடிப்படையில் அதன் பிறகு தாவா டிரஸ்ட்டை இந்த நிர் 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு அவர்களின் சரியான விலாசத்தில் பதிவுத் தபால் அனுப்பி ஒப்புதல் கேட்டதற்கு எந்தவிதமான பதிலும் அளிக்காத காரணத்தால் மேற்படி செயலுக்கு சம்மதம் தெரிவித்து விட்டார்கள் என்ற அடிப்படையில் தான் தாவா டிரஸ்ட் சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் தாவா டிரஸ்டில் இந்த நிர் வாதிகளுக்கு எந்தவிதமான சம்பந்தமும் சட்டப்படி இல்லாத பட்சத்தில் தாவா பரிகாரம் வேண்டி தாவா பிராது தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் மேற்படி

பரிகாரங்கள் வாதிகளுக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எழுவினாக்கள்**:-

இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக நன்கு பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் இந்த நீதிமன்றத்தினால் வனையப்பட்டுள்ளன.

1. வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
2. இதர பரிகாரம் என்ன?

**4. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :

4.1) வாதிகள் தரப்பில், வா.சா.1, வா.சா.2 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதிகள் தரப்பில் 6ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எழுவினாக்களுக்கான தீர்வு** :
5**) எழுவினா 1 –ற்கான தீர்வு** :

1. வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

5.1) வாதிகள் மற்றும் 1ம்பிரதிவாதியின் மூதாதையர் சுப்பாரெட்டியார் என்பவர் தாவா கிராமத்தில் அமைந்துள்ள சித்திவிநாயகர் கோவிலுக்கு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தானமாக கொடுத்தார் என்றும், பின்னிட்டு மேற்படி கோவிலை நிர்வாகம் செய்வது சம்மந்தமாகவும் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தர் என்றும், அதன்பின்னிட்டு மேற்படி சுப்பாரெட்டியாரின் வாரிசுகள் சித்திவிநாயகர் கோவிலுக்கு டிரஸ்டிகளாகவும் பரம்பரை பூசாரிகளாகவும் இருந்து வந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2) இந்நிலையில் 1ம்பிரதிவாதி மட்டுமே மேற்படி சித்திவிநாயகர் கோவிலுக்கு பூஜைகள் செய்து நிர்வாகம் செய்து வருவது போன்று வா.சா.ஆ.7 டிரஸ்ட் ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியுள்ளார் என்றும், மேற்படி டிரஸ்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் வாதிடப்பட்டது.

5.3) அதற்கு மாறாக, பிரதிவாதி தரப்பில் மேற்படி வா.சா.ஆ.7 டிரஸ்ட் ஆவணமானது 1ம்பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்ட Public Trust என்றும், மேற்படி டிரஸ்டின் கொள்கைகளும் செயல்பாடுகளும் சமூகத்திற்கு நல்ல விசயங்களை செய்து தருவதை அடிப்படையாக கொண்டது என்றும், மேற்படி டிரஸ்டின் பெயர் மட்டுமே சித்திவிநாயகர் கோவில் டிரஸ்ட் ஆகும் என்றும் வாதி பிராதில் கூறுவது போன்று மேற்படி வா.சா.ஆ.7 ஆவணம் மூலம் வாதிகள் சித்திவிநாயகர் கோவில் நிர்வாகத்தை பெறவில்லை என்றும் அதற்கு முன்பிருந்தே மேற்படி சித்திவிநாயகர் கோவில் நிர்வாகத்தையும், பூஜைகளையும் பிரதிவாதிகளே செய்து வந்தனர் என்றும் வாதி கூறுவது போன்று வா.சா.ஆ.7 ஆவணம் மோசடியானதல்ல என்று வாதிடப்பட்டது.

5.4) அசல் வழக்கானது கடந்த 03.09.2013ல் ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.7 ஆவண எண்.3/13 ஆனது செல்லத்தக்கதல்ல என்றும், வாதியையோ, சித்திவிநாயகர் கோவிலில் வாதிக்குரிய உரிமையையோ கட்டுப்படுத்தாது என்று விளம்புகை செய்யவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.5) வா.சா.ஆ.2 ஆக விசாரணை செய்யப்பட்ட 2ம்வாதி தனது குறுக்கு விசாரணையில், **"எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று தெரியுமா என்றால் சித்திவிநாயகர் கோயிலுக்கு பாத்தியப்பட்ட இடம் எங்களுக்குதான் சொந்தம் என்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சித்திவிநாயகர் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை பொறுத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபரத்தை தான் எனது வழக்கறிஞரிடம் கூறினேன் என்றால் சரிதான். வழக்கு விபரம் குறித்து கூற யார் யார் சென்றோம் என்றால் நானும் ராதாகிருஷ்ணன் என்பவரும் சென்றோம். நாங்கள் 2பேரும் எனது வழக்கறிஞரிடம் சென்று சித்திவிநாயகர் கோயிலுக்கு பாத்தியப்பட்ட நிலம் சம்பந்தமாக வழக்கு போடவேண்டும் என்று சொன்னோம் என்றால் சரிதான். மேற்கண்ட நிலம் சம்பந்தமாகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று கூறப்பட்டுள்ளது.** மேற்படி வா.சா.2ன் சாட்சியமானது பிராது

விபரத்திற்கு முரணாக உள்ளது. மேலும், வா.சா.ஆ.7 ஆவணமானது வாதி கூறுவது போன்று சித்திவிநாயகர் கோவில் சம்மந்தப்பட்டதாகவோ, கோவில் நிர்வாகம் சம்மந்தப்பட்டதாகவோ ஏற்படுத்தப்பட்ட ஆவணமாக காணப்படவில்லை.

5.6) இந்நிலையில், வா.சா.ஆ.7 ஆவணத்தை பொறுத்து வாதிகளுக்கு அசல் வழக்கு தாக்கல் செய்யவேண்டிய வழக்கு மூலம் எதுவும் எழுந்துள்ளதாக வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. அசல் வழக்கானது அவசியமற்ற முறையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைத்த வாதத்திற்கு முரணாக வாதிகள் தரப்பில் சட்டப்படியான சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலையப்படுத்தவில்லை. மேலும், அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக எவ்வித வழக்குமூலமும் இன்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவே நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து எழுவினா –1ற்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**6. எழுவினா 2–ற்கான தீர்வு : –**

2. இதர பரிகாரம் என்ன?

இவ்வழக்கில் வழக்குச்சொத்தை பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், எழுவினா– 1 க்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிகளுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றே இந்த எழுவினாவிற்கு விடை காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு,

என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 16.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.16 18:16:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.),
திருமங்கலம்.

**இணைப்பு:–**

1. **வாதி தரப்பு சாட்சிகள்:–**

வா.சா.1. – பாலசுப்ரமணியன்
வா.சா.2. – சுப்பாரெட்டியார்

2. **வாதி தரப்பு சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1. | 13.02.1936 தேதியிட்ட சுப்பாரெட்டியார் சித்திவிநாயகர் கோயிலுக்கு எழுதி வைத்த இனாம் செட்டில்மெண்டு. |
| வா.சா.ஆ.2. | 18.07.1978ம் தேதி 2ம் வாதியை தத்து எடுத்ததற்கான சுவீகாரபத்திரம். |
| வா.சா.ஆ.3. | 02.07.2014 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு. |
| வா.சா.ஆ.4. | உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் கொடுத்த குறிப்பாணை 11.08.2014 தேதியிட்டது. |
| வா.சா.ஆ.5. | 15.07.2014 தேதிய வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன். |
| வா.சா.ஆ.6. | 24.07.2014 தேதிய பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு. |

வா.சா.ஆ.7. 18.08.2014 தேதியிட்ட தகவல் உரிமை சட்டத்தரின் கீழ் கிடைக்கப்பெற்ற டிரஸ்டு ஆவணம்.

வா.சா.ஆ.8. 15.06.1982 தேதியிட்ட துணை ஆணையர் 41–71ல் வழங்கிய உத்தரவு.

வா.சா.ஆ.9. 16.10.1984 தேதிய பதிவு பாகவிஸ்தி நகல்.

வா.சா.ஆ.10. 1409F, 1403, 1414 பசலிக்கான ரசீது.(வரிசை 3)

வா.சா.ஆ.11. 12.11.2003 தேதிய தாக்கீது ரசீது.

வா.சா.ஆ.12. முன்னெச்சரிக்கை மனு அலுவலக நகல்.

வா.சா.ஆ.13. பட்டா எண்.213 ற்கான சிட்டா.

3. <u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் </u>: –

பி.வா.சா.1. – சசிக்குமார்

4. <u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :–

பி.வா.சா.ஆ.1. 03.09.2013ம் தேதியிட்ட டிரஸ்ட் பதிவு பத்திரத்தின் சான்றிட்ட நகல்.

பி.வா.சா.ஆ.2. 16.10.2019ம் தேதியிட்ட கணினி சிட்டா.

பி.வா.சா.ஆ.3. 16.03.2021ம் தேதியிட்ட கிஸ்தி ரசீது.

பி.வா.சா.ஆ.4. வீட்டு வரி ரசீதுகள் (3 எண்ணம்)

பி.வா.சா.ஆ.5. மின்சார கட்டண ரசீதுகள் (2 எண்ணம்)

பி.வா.சா.ஆ.6. 12.06.2008ம் தேதியிட்ட உத்தரின் உண்மை நகல்.

பி.வா.சா.ஆ.7. பொதுக்குழு கூட்ட அறிவிப்பு மற்றும் அஞ்சல் உறைகள் (2 எண்ணம்)

பி.வா.சா.ஆ.8. அறை வாடகை ரசீது மற்றும் நோட்டு புத்தகம் வாங்கிய ரசீது (2 எண்ணம்)

**5. <u>நீதிமன்ற சாட்சிகள்</u> :** இல்லை.

**6. <u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :** இல்லை.

**7. <u>சாட்சிகளின் சான்றாவணங்கள்</u> :** இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.16 18:16:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.245/2014
செவ்வை – தீர்ப்புரை
நாள்: 16.03.2026